பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
13 06 2024 12 40
வியாழக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குவைத் தீ விபத்து தொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடி மத்திய அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்துகிறார்.

2. இந்த தீ விபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்திருப்பதாக மாநில அயலக தமிழர் நலத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

3. நீட் தேர்வில் கருணை மதிப்பெண் வழங்கப்பட்ட மாணவர்களுக்கு மறுதேர்வு வரும் 23ஆம் தேதி நடத்தப்படும் என்று மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

4. அருணாச்சலப்பிரதேச முதலமைச்சராக திரு **Pema Khandu** இன்று 3வது முறையாக பதவியேற்றுக்கொண்டார்.

5. ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிட்டன் போட்டியின் காலிறுதிச் சுற்றுக்கு இந்தியாவின் ஆகர்ஷி காஷ்யப் முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

குவைத்தின் மாங்காஃப் பகுதியில் நேரிட்ட தீ விபத்து தொடர்பாக மத்திய அமைச்சரவையின் சிறப்புக் கூட்டம் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் இன்று நடைபெறுகிறது.

இத்தாலி செல்வதற்கு முன் பிரதமர் மத்திய அமைச்சர்களுடன் இந்த சிறப்பு ஆலோசனைக் கூட்டத்தை நடத்துகிறார்.

இந்நிலையில் தீ விபத்தில் உயிரிழந்த இந்தியர்களின் உடல்களை கொண்டு வருவதற்கு விமானப் படையின் விமானம் அனுப்பி வைக்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி விடுத்துள்ள இரங்கல் செய்தியில் பயங்கர தீ விபத்தில் விலை மதிப்பற்ற உயிர்கள் பலியாகி இருப்பது மிகுந்த வேதனை அளிப்பதாகவும், அன்புக்குரியவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தமது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் உயிரிழந்தவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

குவைத் தீ விபத்தில் 5 தமிழர்கள் உயிரிழந்திருப்பதாகவும், உயிரிழந்தவர்கள் தொடர்பான விவரங்களை குவைத் தமிழ்ச் சங்க நிர்வாகிகளிடம் கேட்டறிந்து வருவதாகவும் அயலக தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி மஸ்தான் இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(வாய்ஸ் பைட் - செஞ்சி மஸ்தான் - 56 நொடிகள்)

இதற்கிடையே இந்த தீ விபத்து குறித்து மேலும் விவரங்களைத் தெரிந்துகொள்வதற்கு உதவி எண்களை தமிழக அரசு அறிவித்துள்ளது.

இந்தியாவில் வசிப்பவர்கள் தொடர்புகொள்ள 91 1800 3093 793 என்ற எண்ணும், வெளிநாட்டில் இருந்து இது இதுகுறித்த தகவல்களைத் தெரிந்துகொள்ள விரும்புபவர்கள் 91 80 69 00 99 00 மற்றும் 91 80 69 00 99 01 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஜி-ஏழு உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று இத்தாலி புறப்பட்டுச் செல்கிறார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த வெளியுறவுத்துறை செயலர் திரு **Vinay Mohan Kwatra**, இத்தாலி பிரதமரின் அழைப்பை ஏற்று, இப்பயணத்தை திரு நரேந்திர மோடி மேற்கொள்ள உள்ளதாகக் கூறினார்.

பிரதமராக தொடர்ந்து மூன்றாவது முறையாக திரு நரேந்திர மோடி பதவியேற்ற பின்னர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ள தலைவர்களுடன் பிரதமர் ஆலோசனை நடத்த உள்ளதாகவும் திரு **Vinay Mohan Kwatra** கூறினார்.

ஜி-ஏழு உச்சி மாநாடு இன்று தொடங்கி மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

நாளை நடைபெறும் அமர்வில் பிரதமர் திரு நரேந்திரமோடி பங்கேற்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

அருணாச்சலப்பிரதேச முதலமைச்சராக திரு **Pema Khandu** இன்று 3வது முறையாக பதவியேற்றுக்கொண்டார்.

அவருடன் 11 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டனர்.

தலைநகர் இட்டாநகரில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் அம்மாநில ஆளுநர் லெஃப்டினன்ட் ஜெனரல் திரு. **K.T. Parnaik** அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இந்த பதவியேற்பு விழாவில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா, பிஜேபியின் மூத்த தலைவர்களின் ஒருவரான திரு. ரவிசங்கர் பிரசாத், அசாம், சிக்கிம் மாநில முதலமைச்சர்கள், மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு ஆகியோர் கலந்துகொண்டனர்.

அருணாச்சலப்பிரதேசத்தில் மொத்தமுள்ள 60 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 46 தொகுதிகளில் பிஜேபி வெற்றி பெற்று மீண்டும் அங்கு ஆட்சியமைத்துள்ளது.

<<<<>>>>

வரும் 21ஆம் தேதி 10வது சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுவதை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி தடாசனா யோகா காணொலியைப் பதிவிட்டுள்ளார்.

அதில் இந்த யோகாசனம் உடலுக்கு அதிக வலிமை தரக்கூடியது என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நீட் தேர்வில் எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை என்று மத்திய கல்வித்துறை அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

மத்திய கல்வியமைச்சராக மீண்டும் அவர் இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நீட் தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணையில் இருப்பதாகவும், இது தொடர்பான விவரங்களை அரசு உச்சநீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் கல்வியாளர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு நீட் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து ஆய்வு செய்யும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே உச்சநீதிமன்றத்தில் இன்று நடைபெற்ற நீட் தொடர்பான வழக்கு விசாரணையின்போது, கருணை அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்பட்ட ஆயிரத்து 563 மாணவர்களுக்கு வரும் 23ஆம் தேதி மீண்டும் தேர்வு நடத்தப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த தேர்வின் முடிவுகள் ஜூன் 30ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் மீன்பிடி தடைக்காலம் நாளையுடன் முடிவடைவதை ஒட்டி, கடலுக்குள் செல்வதற்கு மீனவர்கள் தயாராகி வருகின்றனர்.

மீன்கள் இனப்பெருக்கத்திற்காக ஏப்ரல் 15ஆம் தேதி முதல் ஜூன் 14ஆம் தேதி வரை மொத்தம் 61 நாட்களுக்கு மீன்பிடி தடைக்காலம் அமலில் இருந்து வருகிறது.

நாளை மறுநாள் முதல் ஆழ்கடலுக்குச் செல்லும் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க தயாராகி வருகிறார்கள்.

சென்னையை அடுத்துள்ள காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் ஆயித்து 200க்கும் மேற்பட்ட விசைப்பட மீனவர்கள், 800க்கும் மேற்பட்ட ஃபைபர் படகு மீனவர்கள் இந்த மீன்பிடி தடைக்காலத்தில் கடலுக்குச் செல்லவில்லை.

தற்போது படகுகளை சரிபார்ப்பது, வர்ணம் பூசுவது, வலைகளை சரிபார்ப்பது போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

<<<<>>>>

இந்த ஆண்டு ஹஜ் புனித யாத்திரையில் இதுவரை ஒரு லட்சத்து 75 ஆயிரம் இந்தியர்கள் பயணம் மேற்கொண்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புனிதப் பயணம் மேற்கொண்டுள்ள யாத்ரீகர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் மத்திய அரசு ஏற்படுத்தித் தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய ஹஜ் குழுவின் மூலமாக ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 20 பேர் பயணம் மேற்கொண்டுள்ளதாகவும், மதீனாவை சுற்றிள்ள விடுதிகளில் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு கூறியுள்ளது.

ஜெத்தாவில் இருந்து மெக்காவிற்கு அதிவேக ரயிலில் 33 ஆயிரம் இந்திய யாத்ரீகர்கள் பயணம் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபிய அரசுடன் இணைந்து ஹஜ் யாத்திரையானது மிகவும் சுமுகமாகவும், பாதுகாப்புடனும் நடைபெறுவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மத்திய அரசு செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் தோடா மாவட்டத்தில் **Gandoh** என்ற இடத்தில் பாதுகாப்புப் படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று இந்தப் பகுதியில் தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது.

இதில் பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் காயமடைந்தார்.

தொடர்ந்து அந்தப் பகுதிகளில் தீவிரவாதிகளின் நடமாட்டம் இருக்கக்கூடும் என்ற அடிப்படையில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

<<<<>>>>

சிக்கிம் மாநிலத்தில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக வடக்கு சிக்கிம் உள்ள **Mangan** என்ற பகுதியில் மிகப்பெரிய நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலச்சரிவில் சிலர் உயிரிழந்துள்ளனர். வீடுகள் முற்றிலுமாக சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. பிரேம்சிங் தமாங் தெரிவித்துள்ளார்.

மேலும் மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறையினர் விரைந்து நிவாரணப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்று அவர் உத்தரவிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணப் பொருட்கள் வழங்கப்படும் என்றும், அவர்கள் தங்குவதற்குத் தேவையான தற்காலிக தங்குமிடங்கள் ஏற்படுத்தி தரப்படும் என்றும் அம்மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பப்புவா நியூகினியாவில் அண்மையில் நேரிட்ட மிகப்பெரிய நிலச்சரிவு காரணமாக அங்குள்ள **Enga** மாகாணத்தில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள மக்களின் துயர்துடைக்கும் வித்தில் இந்தியா மனிதாபிமான அடிப்படையில் 19 டன் நிவாரணப் பொருட்களை விமானம் மூலம் அனுப்பி வைத்துள்ளது.

இது தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், பப்புவா நியுகினியாவுக்கு 10 லட்சம் அமெரிக்க டாலர் மதிப்பிலான நிவாரணப் பொருட்கள் வழங்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிவாரணப் பொருட்களில் 13 டன் அளவிலான தற்காலிக கூடாரங்கள், தண்ணீர் கேன்கள், சுகாதாரப் பொருட்கள், துரித உணவுகள் ஆகியவற்றுடன் 6 டன் மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிட்டன் போட்டியின் காலிறுதிச் சுற்றுக்கு இந்தியாவின் ஆகர்ஷி காஷ்யப் முன்னேறியுள்ளார்.

சிட்னியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-16, 21-13 என்ற செட் கணக்கில் ஆஸ்திரேலியாவின் **Kai Qu Teoh**-ஐ வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சுமித் ரெட்டி – சிக்கி ரெட்டி இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

இந்த இணை 21-11, 21-11 என்ற செட் கணக்கில் ஆஸ்திரேலிய இணையை வென்றது.

------------

உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெணட்டி கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் இன்று நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு 8 மணிக்கு வெஸ்ட் இண்டீசில் உள்ள கிங்ஸ் டவுனில் நடைபெறுகிறது.

<<<<>>>>